**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 23.01.2024 |
| Case No. | : **O.S.56/2019** | Nationality | : Indian |
| Name | : தேவராஜன் | Religion | : |
| Father's/Husband's Name | : குப்பாஜிராவ் | Age | : 63 |
| Village | : | | |
| Taluk | : | | |

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**2,3,4 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வீட்டிற்கு பட்டா கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது வீட்டின் சர்வே எண் என்ன என்றால் புல எண் 326/40 ஆகும். வாசாஆ 1 வீட்டு வரி ரசீதுகளில் கதவு எண், புல எண் என்ற இடத்தில் 192 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சில ரசீதுகளில் 1-92 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 2 ல் குடிநீர் கட்டண ரசீதுகளில் புல எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 4 ல் இருப்பிட சான்றிதழிலும் புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 8 வட்டாட்சியர் அளித்த பதிலில் பட்டா எண் 18 அரசரடி பிள்ளையார்கோவில் என்று குறிப்பிட்டு மேலெழுத்து வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அந்த பஞ்சாயத்தில் எனக்கு வேறு வீடு உள்ளது என்றால் வேறு வீடு எதுவும் இல்லை. நான் குடியிருப்பதாக சொல்லும் இடம் நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் சரிதான். அந்த இடம் ஆதியில் யாருக்கு சொந்தம் என்றால் எனது தந்தையார் காலத்தில் இருந்து நாங்கள் அங்குதான் குடியிருக்கிறோம். எனது தந்தையார் எனது பெயரிலோ எனது சகோதரர் பெயரிலோ பத்திரம் எதுவும் ஏற்படுத்தி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்தில் அரசரடி பிள்ளையார்கோவில் உள்ளதா என்றால் தாவா சொத்தில் இல்லை. கோவில் எங்குள்ளது என்றால் கிழக்கு மேற்கு ரோட்டில் தென்புறம் கோவில் உள்ளது. எனது வீடு என்ன வகையான வீடு என்றால் இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடாகும்.

3. எனது தந்தையார் காலத்தில் பட்டா கேட்டு மனு எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் அவர் கொடுத்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. நான் தாவா சொத்திற்கு பட்டா கேட்டு மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்துள்ளேன். அரசரடி பிள்ளையார் கோவில் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யக்கோரி வருவாய் கோட்டாட்சியரிடம் மனு எதுவூம் கொடுக்வில்லை என்றால் சரியல்ல. கொடுத்துள்ளேன். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையில் உள்ள பிரச்சனையில் 2 முதல் 7 பிரதிவாதிகளை இவ்வழக்கில் தேவையில்லாமல் தரப்பினர்களாக சேர்ததுள்ளேன் என்றால் சரியல்ல. நான்தான் கோவிலுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பத்திரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாவா சொத்தை பொறுத்து பத்திரம் எதுவும் ஏற்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு தொடர்பில்லாத வேறு சொத்திற்கான ஆவணங்கள் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

ஒப்பம்/- நா. சிவபழனி,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.